# எதை நான் தருவேன் இறைவா

எதை நான் தருவேன் இறைவா - உம்
இதயத்தின் அன்பிற் கீடாக
எதை நான் தருவேன் இறைவா - ( 2 )

**1**
குறை நான் செய்தேன் இறைவா - பாவக்
குழியில் வீழுந்தேன் இறைவா -2
கறையாம் பாவத்தை நீக்கிடவே - நீர்
கல்வாரி மலையில் இறந்தாயோ.

**2**
பாவம் என்றொரு விஷத்தால் - நான்
பாதகம் செய்தேன் இறைவா -2
தேவனே உம் திருப் பாடுகளால்-2 எனைத்
தேற்றிடவோ நீர் இறந்தாயோ.

**3**
அகிலமே அறிவால் அளந்தேன் - உன்
அன்பையும் அறிந்து மறந்தேன் -2
மகிமை நிறைனந்த எம் இறைவா -2- நீர்
மனிதன் எனக்காய் இறந்தாயோ.